Aparajitha

# வெற்றியின் விதைகள்

காலாண்டுச் செய்திமடல்

சூலை - செப்டம்பர் 2019



வாழ்க்கைத் திறன்களின் வழியாக நிலைமாற்றம்

# 31

## இதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்

## உள்ளடக்கம்


வணக்கம் . . . . . . . . . . . . . . . . . . . . . 2

தளிர்த்திறன் திட்டச் செயலி.. . . . . . . . 3

டிம் டிம் தாரே ஆசிரியர் பயிற்சி. . . . .4

கலைகளின்வழி வாழ்க்கைத்திறன் கல்வி. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .5

விளையாட்டுப்பயிற்சி முகாமினருக்கு. .7

எதிரொலிகள். . . . . . . . . . . . . . . . . . . . 8



*அபராஜிதா அறக்கட்டளை*
*5அ, வி.பி.இரத்தினசாமி சாலை*
*பீபீ குளம்*
*மதுரை 635002*

*0452-4375252*

info@aparajitha.org


# வணக்கம்!

ஆழ்கடலின் ஆழத்தை அக்கடலில் மிதக்கும் கப்பலிலிருந்து ஒலியலையை கடலுக்குள் செலுத்திக் கணிப்பர். அதற்குப் பயன்படும் கருவிக்கு எதிரொலிமானி (Echo sounder) எனப் பெயர். இதேபோல மாணவர்களின் மனமென்னும் ஆழ்கடலில் தளிர்த்திறன் திட்டத்தால் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைக் கணிப்பதற்குத் தேவையான தரவுகளைத் திரட்ட “டிடிடி அபராஜிதா” என்னும் கைபேசிச் செயலி ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. அச்செயலியைப்பற்றி விளக்குகிறது இவ்விதழின் முதற்பதிவு.

ஆழ்கடலுக்குள் ஒலியலையை அனுப்பப் பயிற்சி வேண்டும். அதேபோல மாணவர் மனக்கடலுக்குள் வாழ்க்கைத்திறன்களை விதைக்கவும் பயிற்சி வேண்டும். அப்பயிற்சியைப்பற்றிப் பகிர்கிறது இரண்டாவது பதிவு.


ஆழ்கடல் ஆழத்தைக்காணப் பயன்படும் முறை, சராசரி கடல் மட்டத்தைக் காணப் பயன்படுவது இல்லை. அதேபோல கோடைக்காலத்தில் வகுப்பறைக்கு அப்பால், மாணவர்களின் மனத்தில் வாழ்க்கைத் திறன்களை விதைக்கப் பின்பற்றிய வெவ்வேறு வழிமுறைகளைப்பற்றிப் பேசுகின்றன மூன்றாவது, நான்காவது பதிவுகள்.

அனைத்தையும் படியுங்கள் . . .
தங்களின் கருத்துகளைப் பகிருங்கள். . .
நண்பர்களுக்குப் பரப்புங்கள். . .

*தொடர்ந்து தங்களின் ஆதரவையும்*
*ஆலோசனையையும் எதிர்நோக்கும்,*
***ஆசிரியர் குழு***

***த**ளிர்த்திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், அரியானா ஆகிய 6 மாநிலங்களில் செயலாக்கம் செய்யப்படுகிறது.*

# தளிர்த்திறன் திட்டச் செயலி




தளிர்த்திறன் திட்டம் தற்பொழுது 3 மொழிகளில் 6 மாநிலங்களில் 79,195 பள்ளிகளில் 1 கோடிக்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வருகிறது. அதன் விளைவாக மாணவர்களிடையே ஏற்பட்டுவரும் நடத்தை மாற்றங்களை ஆசிரியர்கள் அபராஜிதாவிற்கு எளிதில் தெரிவிக்கவும் தளிர்த்திறன் திட்டம் தொடர்பான செய்திகளை ஆசிரியர்களுக்கு அபராஜிதா தெரிவிக்கவும் உதவும்வகையில் “தளிர்த்திறன் திட்டச் செயலி” (TTT App) ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

கைபேசி செயலிகளின் தளமான கூகுள் பிளேஸ்டோருக்குச் (Google Playstore) சென்று “TTT Aparajitha” எனத் தட்டச்சுச் செய்து தேடினால், இச்செயலி கிடைக்கும். அதனை ஆசிரியர்கள் தமது கைபேசியில் தரவிறக்கி, நிறுவி, தமது பள்ளியின் பெயரைத் தனிப்பட்ட கடவுச்சொல்லோடு (Password) பதிவுசெய்யலாம். பின்னர் தளிர்த்திறன் திட்ட வகுப்பு நிறைவடைந்த உடனேயே அதுபற்றிய செய்திகளையும் ஒளிப்படத்தையும் இச்செயலியின் வழியே பதிவேற்றலாம்.

இச்செயலியைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் பலர் தளிர்த்திறன் திட்ட வகுப்புகளைப் பற்றிய செய்திகளை உடனுக்குடன் தெரிவித்துக்கொண்டிருக்கின்றனர்.

\- *கிருஷ்ணா*

# டிம் டிம் தாரே ஆசிரியர் பயிற்சி

அபராஜிதா வழங்கும் வாழ்க்கைத்திறன் கல்வியின் இந்தி வடிவமான டிம் டிம் தாரேவை ஹிமாசல் பிரதேசத்தில் செயற்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2019 மார்ச் 5ஆம் நாள் கையெழுத்திடப்பட்டது. இத்திட்டத்தைச் செயற்படுத்தலின் முதற்கட்டமாக, 2019 மார்ச் 9ஆம் நாள் சிம்லாவில் மாவட்டத் திட்ட அலுவலர்கள், வட்டார வளநடுவ ஒருங்கிணைப்பாளர்கள் 55 பேருக்கு டிம் டிம் தாரே பற்றிய அறிமுகம் வழங்கப்பட்டது. இரண்டாங்கட்டமாக 2019 சூன் 13ஆம் நாள் முதல் சூலை 25ஆம் நாள் வரை அம்மாநிலத்திலுள்ள 11 மாவட்டங்களில் பணியாற்றும் 4000 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.






ஹிமாசல் பிரதேசத்தில் 2018 மே 14ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி ஒவ்வொரு மாதமும் நான்காவது சனிக்கிழமை “பை இல்லாத நாள்” (Bag Free Day) என ஒவ்வொரு பள்ளியிலும் கடைபிடிக்கப்படுகிறது. மாணவர்களின் முழுமையான வளர்ச்சியே இந்நாளின் நோக்கம் ஆகும். எனவே, அந்நாளில் பள்ளி அளவிலான விளையாட்டுப் போட்டிகள், கல்வித் துணைச் செயற்பாடுகள் ஆகியன போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, அந்நாளில் மாநிலம் முழுவதுமுள்ள 2200 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் டிம் டிம் தாரே திட்டம் இக்கல்வியாண்டு முதல் செயற்பட உள்ளது. அப்பொழுது, பயிற்சிபெற்ற இவ்வாசிரியர்கள் டிம் டிம் தாரே திட்ட வகுப்புகளை வழிநடத்துவார்கள்.

***- ரூனம் கௌசிக்***

# கலைகளின் வழி வாழ்க்கைத்திறன்கல்வி



“படிப்பவற்றை மறந்துவிடுகிறேன்; கலந்துரையாடியவற்றை நினைவுகூர்கிறேன்; செய்தவைகளையோ மனத்தில் பதித்துக்கொள்கிறேன்” என்னும் கூற்று செயல்வழிக் கற்றலின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது. அம்முறையில் உருவாக்கப்பட்ட அபராஜிதாவின் வாழ்க்கைத்திறன் கல்வியை கோடைவிடுமுறையிலும் மாணவர்களுக்கு வழங்கும் நோக்கில் தமிழ்நாடு, குஜராத், ஹரியானா ஆகிய மாநிலங்களில் “வாழ்க்கைத்திறன் கல்விக்கான கோடைகால முகாம்கள்” நடத்தப்பட்டன. இம்முகாம்கள் அந்தந்த இடங்களிலுள்ள சூழலுக்கேற்ப வடிவமைக்கப்பட்டிருந்தன.

## தமிழ்நாடு

அபராஜிதா அறக்கட்டளையால் ஆண்டுதோறும் ஒருங்கிணைக்கப்படும் கோடை முகாமில் கடந்த மூன்றாண்டுகளாக வாழ்க்கைத்திறனைக் கற்பிக்க வெவ்வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவ்வகையில் இவ்வாண்டு “கலைகளின் வழியாக வாழ்க்கைத்திறன்கல்வி” என்னும் வழிமுறையைப் பின்பற்றி 2019 மே 6 ஆம் நாள் முதல் 10 ஆம் நாள் வரை ஒய்.எம்.சி.ஏ பள்ளியிலும் மே 13 ஆம் நாள் முதல் 17 ஆம் நாள் வரை அன்னைநகரிலும் இரண்டு ஐந்துநாள் முகாம்கள் நடைபெற்றன. இவற்றில் கலந்துகொண்ட 80 மாணவர்களுக்கு புதிர்வெட்டுத் துண்டுகளால் உருவம் அமைத்தல் (Tangram) தென்னையோலையில் பொம்மைகள் செய்தல், வண்ண ஓவியந் தீட்டுதல், கலைப்பொருள்கள் செய்தல், சிறுநாடகங்கள், நிழற்பாவைக்கூத்து ஆகிய கலைவடிவங்களின் வழியே வாழ்க்கைத்திறன்கள் கற்பிக்கப்பட்டன.





## குஜராத்

குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் மாவட்டத்தில் 4 ஒரு நாள் வாழ்க்கைத்திறன் கோடை முகாம்கள் நடைபெற்றன. அவற்றில் 294 மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். அவ்விவரம் வருமாறு:-

| இடம் | நாள் | மாணவர்கள் | பாடம் |
|---|---|---|---|
| லாப்கமன் | மே 4 | 58 | நட்புப் பாராட்டிப் பழகுக |
| சரோடி | ஏப்ரல் 16 | 54 | மகிழ்வுச்செயலில் ஈடுபடப் பழகுக |
| மகமதுபுரா | ஏப்ரல் 18 | 98 | இலக்கை அமைக்கப் பழகுக |
| ராம்பீர் நோ டெக்ரோ | ஏப்ரல் 17 | 84 | பண்படப் பழகுக!<br>தோற்றத்தைப் போற்றிப் பழகுக |

## ஹரியானா




ஹரியானா மாநில அரசின் கோடை சாகச முகாம்கள் (Summer Adventure Camps) இவ்வாண்டு பஞ்ச்குலா மாவட்டம் மஹல்லா என்னும் ஊரில் நடைபெற்றன. ஒவ்வொரு முகாமிற்கும் 5 நாள்கள் வீதம் 6 முகாம்கள் சூன் 1ஆம் முதல் 30ஆம் நாள் வரை நடைபெற்றன. இம்முகாங்களில் ஹரியானா மாநிலத்தின் 119 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 112 பள்ளிகளில் பயிலும் 988 பெண்மாணவர்களும் அப்பள்ளிகளில் பணியாற்றும் 107 பெண் ஆசிரியர்களும் பங்கேற்றனர். முகாம்களில் பங்கேற்றவர்கள் தடைகளைத் தகர்க்கப் பழகுக, தன்னிரக்கத்தைத் தவிர்க்கப் பழகுக, மாற்றுக்கருத்தை முரண்பாடின்றித் தெரிவிக்கப் பழகுக, ஒப்பானவர்களின் தாக்கத்தைக் கையாளப் பழகுக, முடிவெடுக்கப் பழகுக, நேரத்தைத் திட்டமிடப் பழகுக ஆகிய டிம் டிம் தாரே பாடங்களைக் கற்றனர்.

*- பரத்பூஷன்*

# விளையாட்டுப் பயிற்சி முகாமினருக்கு




ஒருவர், கடினமான சூழ்நிலைகளிலுங்கூட நம்பிக்கையின் கீற்றையும் சிக்கலைத் தீர்ப்பதற்கான வாய்ப்புகளையும் கண்டறிய முனையும் 'உடன்பாட்டு நடத்தை', வாழ்க்கைத்திறன்களை அடைவதற்கான கூறுகளில் ஒன்று என்கிறது உலக நலவாழ்வு அமைப்பு. அந்நடத்தையை வளரிளம் பருவத்தினரிடையே விளையாட்டின் வழியாக விதைக்கும் நோக்கில், மதுரை டி.வி.சுந்தரம் மேல்நிலைப்பள்ளியில் ஆண்டுதோறும் கோடைகால விளையாட்டுப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது. அம்முகாமில் இவ்வாண்டு பங்கேற்ற இருபால் மாணவர்கள் 200பேருக்கு அபராஜிதா அறக்கட்டளையின் சார்பில் T-சட்டைகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.




- *செந்தில்குமார்*

# எதிரொலிகள்

பெருஞ்சிறப்பு வாய்ந்த முயற்சி நன்கு காட்சிப்படுத்தப்பட்டு இருக்கிறது. பாராட்டுகள்!

***- கி. துர்கா***
*அறங்காவலர், அபராஜிதா அறக்கட்டளை, மதுரை, தமிழ்நாடு.*

முக்கியமான மைல்கல்லை அடைந்ததற்குப் பாராட்டுகள்! உங்களது பணி எனக்கு உள்ளூக்கம் தருகிறது. உங்களது வெற்றிக்கும் மேலும் பல சாதனைகளை நிகழ்த்துவதற்கும் எனது வாழ்த்துகள்.

***- கௌதம்***
*அமெரிக்கா*

பங்கேற்றுக்கற்றல் முறையில் மாணவர்கள் மனத்தில் மதிப்பீடுகளை விதைக்க உதவுகிறது டிம் டிம் தாரா திட்டம். இது இந்தியா முழுவதுமுள்ள குழந்தைகளைச் சென்றடைய வேண்டுமென விரும்புகிறேன்; வாழ்த்துகிறேன்!

***- அர்ச்சன்பென் சவுத்திரி***
*மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர், வதோதரா, குஜராத்.*

ஒரு கோடி என்னும் மைல்கல்லை அடைந்ததற்குப் பாராட்டுகள் பல! இது மிகப்பெரிய சாதனை. ஒரு கோடிக் குழந்தைகளின் வாழ்வைத் தற்பொழுது தொட்டுள்ள, புதிய பாதையை அமைக்கிற இத்திட்டத்தோடு நானும் இணைந்திருக்கிறேன் என்பதால் பெருமிதமாக உணர்கிறேன். வருங்காலத்தில் பிற மாநில அரசாங்கங்களுடனும் இணைந்து செயல்படவிருக்கும் அபராஜிதா அறக்கட்டளைக்கு எனது வாழ்த்துகள். இத்திட்டம் நமது நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்கிற்கும் பரவும் என நான் மிகவும் நன்னம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

***- ப்ரீத்தி***
*நொய்டா, உத்தரபிரதேசம்.*

தளிர்த்திறன் திட்டத்தின் வீச்சை அறிந்து மகிழ்கிறேன்.

***- எஸ். வெங்கடேஷ்குமார்***
*தலைமை நிதி அலுவலர், அபராஜிதா குழுமம், மதுரை, தமிழ்நாடு.*

தளிர்த்திறன் திட்டம் மென்மேலும் வளர, புதிய உயரங்களைத் தொட வாழ்த்துகள்.

***- எம். பாலகுரு***
*தலைமை இயக்குகை அலுவலர், அபராஜிதா குழுமம், மதுரை, தமிழ்நாடு.*

இந்தியா முழுவதும், ஒரு கோடிக்கும் மேற்பட்ட மாணவர்களின் வாழ்க்கைமுறையை மாற்றுவதற்கான வழிமுறைத் தெரிந்தெடுத்த அபராஜிதா மேலாண்மைக்கும் தளிர்த்திறன் திட்டக் குழுவினருக்கும் எனது இனங்கனிந்த பாராட்டுகள்!

***- திலீப்குமார்***
*மேலாளர் - கிழக்கிந்தியா, அபராஜிதா குழுமம், கொல்கத்தா, மேற்கு வங்காளம்.*

ஒரு கோடி என்னும் மைல்கல்லை அடைந்து, அதனைக் கடந்ததற்காக இதயங்கனிந்த பாராட்டுகள். மென்மேலும் பல கோடிகளை அடையவிருப்பதற்கு வாழ்த்துகள்.

***- முனைவர் சு. வெங்கடேஷ்***
*முதுநிலை செயல்முறைப் பகுப்பாய்வாளர், அபராஜிதா குழுமம், மதுரை, தமிழ்நாடு.*